February 14, 2009

# WINDCARE Chronicle

Praise the Lord

**Web**: www.windcareindia.com *Reaching you with News drops!* Volume 03, Issue 02

## Our Services

Without Crane Technology

Wind park Operation

Maintenance & Services

Service Centre

Turnkey Project

Small Wind Turbine

Consultancy

## Our Vision

To ensure our customers receive a satisfactory services from a number one service provider.

**Enhance the contribution of our services to the global market and provide continuous support to the global efforts in attaining energy Independence.**

## நமது சிந்தனைக்கு

நல்லதை நினைப்பது நல்லது, நல்லதைச் செய்வது புனிதமானது **-ஹாரஸ்மான்.**

பிறந்து 5 நாட்களே ஆண பெண் குழந்தை குப்பைத்தொட்டியில் கண்டுபிடிப்பு..

பெண்குழந்தையை கிணற்றில் வீசிக் கொன்ற தகப்பன் கைது.. ..

பிரசவ அறையில் அநாதையாய் விட்டுச் சென்ற பெண் குழந்தை, தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைப்பு.. ..

ஆண் பெண் என்று வேறுபாடு இல்லாத ஈவு இரக்கமற்ற, சுயநலத்தில் மிகக் குறுகிப்போன சுயநலவாதிகளாய் வளரும் இச்சமுதாயத்தில்..

மாத்திரை பெரிதாக இருக்கிறது, மருந்து கசப்பாக இருக்கிறது எனவே சுகவீனமான எனது குழந்தையால் இதை உட்கொள்ள முடியாது என்று நினைக்கும் தாய், தான் சுகமாக இருந்தாலும், தன் குழந்தையின் இயலாமை அல்லது ஒவ்வாமையை நினைத்து மருந்தை தானே எடுத்துக்கொண்டு, தனது இரத்தத்தை பாலாக, மருத்துவ பாலாக மாற்றிப் பரிமாறும் அதிசயம்.. இங்கே மருத்துவ சிகிச்சையின் முறை முக்கியமல்ல, மாறாக அன்பு என்ற செயல்முறையைப் பார்க்கிறோம்.
- இரபீந்திரநாத் தாகூர்

சிறுவன் முட்டைகள் அடங்கிய பெட்டியை மிதிவண்டியில் வைத்து எடுத்துச் சென்று கொண்டிருந்தான். சிறு கல் மீது மிதிவண்டி ஏறியதால், நிலை தடுமாறி கீழே விழுந்தான். முட்டைகள் அனைத்தும் நொறுங்கிப் போனது. இதை பார்த்த மக்கள் கூடி விட்டனர்.

மிகப் பரிதாபப்பட்ட ஒருவர் சொன்னார், சே.. என்ன பரிதாபம் இன்னொருவர் சொன்னார் சின்னப்பையன் என்ன செய்வான், நாமாக இருந்தால் இப்படி நடந்திருக்காது. வேறொருவர் சொன்னார், அடடா, அவன் அழுதிட்டிருக்கான் பயப்படாதப்பா நீ என்ன செய்வாய்.

கூட்டத்தில் இருந்த ஒருவர் முன்பாக வந்து தனது சட்டைப் பையில் கைவிட்டுக் கொண்டே, நீங்கள் எவ்வளவு பகிர்ந்து கொள்ளப் போகீறீர்கள், நான் இரண்டு ரூபாய் தருகிறேன் என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்டார்.

இரக்கப் படுதலில் ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை, அதை செயலுக்கு கொன்டு வரும்போது தான் ஒரு தேவையை சந்திக்க முடியும்.

**நன்மை செய்யும்படி உனக்குத் திராணி இருக்கும்போது அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமலிராதே.. (பைபிள்) நீதி 3. 27.**

Courtesy: World Light Service Mission

## Small Wind Turbine Dealership

நவம்பர் 2008 முதல் நமது நிறுவனத்திற்கு அங்கீகாரம் பெற்ற சிறிய காற்றாலை விற்பனை முகவர் என்னும் சான்றிதழை புனே-யை சார்ந்த யுனிட்ரான் நிறுவனம் வழங்கியுள்ளது. **650W, 1.5-KW, 3.3-KW** and **4.2-KW** காற்றாலைகளை விற்பனை செய்வதற்கு நாம் முயற்சிகள் மேற்கொன்டுள்ளோம். 1.5-KW Capacity காற்றாலையை குடிமங்கலம் பணித்தளத்தில் நிறுவியுள்ளோம்.

## அன்புக்குரியவர்களே....

நமது நிறுவனம் புதிய பணிகள் மட்டுமல்லாது சிறப்பாக சமுதாய நலம் சார்ந்த பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக குடியரசு தினத்தை முன்னிட்டு இரத்த தானம் மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் அமைத்து நாம் வாழும் சமுதாயத்திற்கு நமது பங்களிப்பை சிறப்பாக வெளிப்படுத்தினோம்.

இன்றைய சூழலில் நம்முன் மிகப்பெரிய சவால் எதிர்நோக்கியுள்ளது. ஆம் உளகளாவிய பொருளாதார தேக்கம், நெருக்கடி – இதன் விளைவு ஆட்குறைப்பு, ஊதிய குறைப்புகள்.. இந் நிலையில் நம் அனைவரின் ஒருங்கிணைந்த செயல்பாடும் பங்களிப்பும் நமது நிறுவனத்தின் தடையில்லா செயல்பாட்டிற்கு மிகவும் தேவையானது.

அதாவது, தேவையில்லாத செலவுகளை தவிர்த்தல், இருக்கின்ற மனிதவளத்தை சிறப்பாக பயன்படுத்துதல், நமது பணிகளை குறிப்பிட்ட கால நேரத்திற்குள் நிறைவு செய்தல், வாகனங்களை சிறப்பாக பயன்படுத்தி எரிபொருள் சேமித்தல் போன்ற முயற்சிகளில் உங்களை செயல்பட அழைக்கிறேன்.

பாதுகாப்புடன் பணியாற்றி திட்டமிட்டு நம் குறிக்கோள்களை அடைய உங்கள் பங்களிப்பிற்காக காத்திருக்கிறேன்.

**S. Antonyraj - CEO**

## பொங்கல் விழா

ஜனவரி 14, திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் பகுதி மேட்டுப்பிராஞ்சேரி -யிலிருந்து பணியாற்றும் ஊழியர்களின் அழைப்பை ஏற்று அங்கு நடந்த பொங்கல் விழாவில் நமது C.E.O. திரு. S. அந்தோனிராஜ் அவர்களுடன் திரு. S. சிவகுமார் திரு. ஹொர்சன் திரு.அந்தோனிசாமி ஆகியோர் கலந்துகொன்டு வாழ்த்துக்களை பகிர்ந்துகொன்டு சிறப்பித்தார்.

எழுந்து நில், வலிமையுடன் இரு, தைரியமாக செயல்படு, உன் விதியை படைப்பவன் நீயே –விவேகானந்தர்.

Edited By: P. Jebastin
+91-94422 68143

# குடியரசு தினம்



நமது நிறுவனத்தில் ஆகஸ்டு 26, அன்று காலை 9.00 மணிக்கு குடியரசு தினம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிறுவனத்தின் தலைவர் மற்றும் துறைத்தலைவர்கள் பணியாளர்கள் உட்பட சுமார் 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொன்டனர். குடிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் திருமதி கீதாராணி அவர்கள் தேசிய கொடியேற்றி விழாவை துவக்கி வைத்தார். திரு.ஆண்டர்சன் சாமுவேல் வரவேற்புரை வழங்கினார். நமது நண்பர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருடனும் குடியரசு தின வாழ்த்துகளை இனிப்புகள் வழங்கி அனைவரும் பகிர்ந்து கொண்டனர்.









# இரத்த தான முகாம்

ஆகஸ்டு 26, குடியரசு தினத்தை முன்னிட்டு நமது நிறுவனம் மற்றும் குடிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இணைந்து நடத்திய இரத்ததானம் மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் குடிமங்கலம் பெட்ரோல் பங்க் பின்புறம் அமைந்துள்ள தேவனுடைய வீடு வளாகத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நமது நிறுவனத்தின் தலைவர் S. அந்தோனி ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் Vestas நிறுவனத்தின் திரு. வெங்கிட நாயுடு அவர்கள் சிறப்பு விருந்தினராக தனது குடும்பத்தினர் மற்றும் ஊழியர்களுடன் கலந்துகொன்டு மேலும் சிறப்பு சேர்த்தனர்.

டாக்டர் திருமதி G. கீதாராணி (GPHC, குடிமங்கலம்) இரத்த தானம் குறித்தும் டாக்டர் திரு. K. பாலமுரளி (GPHC, இராமச்சந்திராபுரம்) எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு குறித்தும் ஆலோசணைகளை வழங்கினர். சுமார் 130க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர் இதில் 38 பேர் இரத்தம் தானம் செய்தனர். இரத்ததானம் வழங்கிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



## SUZLON 1-MW Gearbox Works

ஜனவரி 25, 2009 SUZLON நிறுவனத்தின் (4–வது) 1-MW காற்றாலையில் Gearbox இறக்கி ஏற்றும் பணியினை நமது WITHOUT CRANE முறையில் மிகவும் சிறப்பாக மஹாராஷ்டிரா மாநிலம் சூபா பணிதளத்தில் (KM-50) வெற்றிகரமாக நமது குழுவினர் செயல்படுத்தியுள்ளனர்.

## RAJASTHAN - SUZLON Generator work

ராஜஸ்தான், அக்டோபர் மாதம் SUZLON 1.25 MW, Site: Jaisalmer Loc-J 261, Blade De and Re-erection-ஐ தொடர்ந்து கடந்த ஜனவரி 05, Loc No. J-266 Generator வேலையை வெற்றிகரமாக நமது குஜராத் அணியினர் முடித்துள்ளனர். ராஜஸ்தானில் விரைவில் பணித்தளம் அமைக்கப்படும்.

## Vestas (RRB/Pawan) 500-KW erection works by without crane.

கர்நாடகா மாநிலம் சதாரா மற்றும் மாவின்குன்டா பணித்தளங்களில் முறையே Location K–1 மற்றும் K-3-ல் Generator De & re-erection வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. நாகர்கோவில் பணித்தளத்தில் Gearbox unit re-erection பணி வெற்றிகரமாக முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா மாநிலம், அரசனகுண்டி, வெஸ்டாஸ் விண்ட்டெக்னாலஜி நிறுவன 1650-KW காற்றாலை பணித்தளத்தில் Structure painting வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## WIND FEST 2009 - EXHIBITION

AL WIND நிறுவனம் சார்பில் ஜனவரி 29, 30 தேதிகளில் கோட்டமங்கலம் பணித்தள வளாகத்தில் நடைபெற்ற கண்காட்சி மற்றும் விளையாட்டு போட்டிகளில் நமது நிறுவனம் கலந்து கொன்டு STALL NO. 1 சிறப்பித்தது. AL WIND நிறுவனத்தின் திரு. சாம்பசிவம் - C.E.O. அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் மற்ற நிறுவனங்கள் உட்பட சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொன்டனர். நமது நிறுவனத்தின் C.E.O. திரு. அந்தோனிராஜ் அவர்கள் பரிசுகள் மற்றும் சிறப்புரை வழங்கினார். திரு.R.ஆன்டர்சன் (Marketing) தலைமையிலான குழுவினர் சிறப்பாக ஒருங்கிணைத்து செயல்படுத்தினர்.

## Introduction - Safety Officer

நமது நிறுவனத்தில் புதிதாக நம்முடன் இணைந்துள்ள Safety Officer திரு.C.சிவக்குமார் மற்றும் காவல்கிணறு தளத்தில் மேலாளராக பொறுப்பேற்றுள்ள திரு. S. ஞானசேகரன் அவர்களையும் அறிமுகம் செய்கிறோம், அவர்களது துறையில் சிறப்புற செயல்பட வாழ்த்துகிறோம். **(Safety Officer: 99429 68158)**

## TAMIL NADU - SUZLON 1.5-MW BLADE RETROFIT WORKS

ஜனவரி 22 – 29 G-957 பாலப்பம்பட்டி பனித்தளத்தில் SUZLON 1.5-MW Windmill's Blades de and re-erection works வெற்றிகரமாக நமது Special Team செய்து முடித்துள்ளனர்.





No. 3/241-A, Four Road, Gudimangalam Post, Udumalpet - 642 201, CBE, Tel: + 91 4252 273840, Fax: 273915 E-mail: chronicle@windcareindia.com